# 4. இளையான்குடி மாறநாயனார்

வேளாளர் - சோழநாடு - இளையான்குடி - ஆவணி - மகம்

எவருக்கு எந்த நேரத்திலும் அன்னமிடும் இனையான்குடி மாறனை, உலகறியச் செய்ய எண்ணங்கொண்ட ஈசன், அவனுக்குச் சொல்லொணா வறுமையைத் தந்தார். வறுமையிலும் பணியை விடவில்லை. பின்னர் சிவடியாகச் சென்று பிக்ஷை கேட்க, மனைவி சொற்படி நெல் விதைத்த இடத்திலிருந்து மண்ணிலிருந்து தானியமெடுத்துத் தந்து வீட்டின் கூரைக்கொம்பை இழுத்து விறகாக்கி விருந்து சமைக்க கண்ட ஐயன் மனமுவந்து காட்சி தந்து, பின்னர் அவர்கள் கரையேறவும் செய்தார்.

**ராகம் : எதுகலகாம்போதி (28)　　　　ஆ : ஸரிமபதஸ்**

**தாளம் : மிச்ரசாபி　அவ : ஸ்நிதபமகரிஸ**

### பல்லவி

இளையான் குடிமாறன் இணையற்ற பக்தியை
எவரும் அறிந்தி திருவுள்ளம் கொண்டீர்

### அனுபல்லவி

சளைத்து உணவின்றிக் களைத்திடச் செய்தே - சிவன்
அடியாகி பிக்ஷை ஏற்க அவன் இல்லம் சென்றீர்

### சரணம்

விதைத்த நெல் விதையெடுத்து கூரையை விறகாய் வைத்து
விருப்புடன் தம்பதிகள் விருந்து சமைந்திட
அது கண்டு மனமுவந்துன் அரும்காட்சி தந்து
சிவலோகம் சென்றவர்கள் சிறப்புடனிருக்கச் செய்தீர்

### பல்லவி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ; ஸ ரி கா க | ॥ | கா, காமப | ॥ | மக ரீக ம க | ॥ | ரிகாமகரி ரி ஸ ஸா | ॥ |
| இளையான்கு | ॥ | டி மா றன் | ॥ | . இணை யற்ற | ॥ | பக் தி. யை | ॥ |
| ; ஸரிகரிஸஸா பா | ॥ | தா, ஸா ஸா | ॥ | ; ஸரிமாம | ॥ | கமபாமா தாபா | ॥ |
| எவ . ரும் . அ | ॥ | றிந் திட | ॥ | திருவுள்ளம் | ॥ | கொண் . . . டீர் | ॥ |

### அனுபல்லவி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ; ம க பா த | ॥ | ஸ்ா, ஸ்ாஸ்ா | ॥ | ; தத நீஸ் நிதா | ॥ | தா , பா , ப |
| சளைத்துஉ | ॥ | ண வின் றி | ॥ | களைத்தி . . டச் | ॥ | செய்தே சி |
| பாமப பமமம ம | ॥ | கம பா பம பத | ॥ | , பம பாதஸ் தப | ॥ | பமமா கா ரீஸா |
| வன்அ டியா . . கி | ॥ | ப . க்ஷை ஏற்க . | ॥ | அவன் இல் . லம் | ॥ | சென் . . றீர் |

**சரணம்**

| | | | |
|---|---|---|---|
| பதா , தஸ்ா | ॥ தஸ் ஸ் நிஸ்ாநிதா | ॥ பாதஸ் தப பப | ॥ மாபமகா கரிரிஸ |
| விதைத்தநெல் | ॥ விதையெடு . த்து | ॥ கூரை . யை . விற | ॥ கா . . ய் வைத்து |
| ஸரிகஸரிஸா | ॥ ஸபதஸாஸா | ॥ ஸ ரீ மா ; | ॥ கம பம த பா |
| விருப்புடன் | ॥ த ம் பதி கள் | ॥ வி ருந்து | ॥ ச . மை . த்திட |
| ; மக பா த | ॥ தஸ்ஸ் ஸா ஸா | ॥ ; தத நீஸ்ா நித | ॥ தா , தபபா |
| அதுகண்டு | ॥ மனமு வந் துன் | ॥ அரும் கா. ட்சி | ॥ தந் து . . |
| ;மப ப ம ம க ம | ॥ கமப பம தப தா | ॥ ; மபம பததப | ॥ மாபமகா மகரிக ரிஸ் |
| சிவ லோக . . . கம் | ॥ சென் . ற . வர் கள் | ॥ சிறப் புடனி . | ॥ ரு . .க்கச் செய் . .தீர் |